டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் வெல்லர்ஸ்
agridoctor.in | 20.11.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 128 | Madurai | Online Edition

அரிசி ஏற்றுமதியில் சென்னை துறைமுகம் புதிய சாதனை



சென்னை, நவ.19

18.11.2026 நிலவரப்படி, சென்னைத் துறைமுகம் ஒரே நேரத்தில் மூன்று கப்பல்களில் அரிசி ஏற்றுமதி பணிகளை சீராக மேற்கொண்டு வருகிறது. தெற்குத் தளத்தில் எம்.வி.ஹெச்டிபி லக்கி, ஜேடி 1 தளத்தில் எம்.வி.இம்பீரியல் வரலக்ஷ்மி, ஜேடி V தளத்தில் எம்.வி.அசோகன் சாந்த்ரா ஆகிய கப்பல்களில் அரிசி ஏற்றுமதி நடைபெற்று வருகிறது. 2026 ஏப்ரல் முதல் நவம்பர் 18 வரை ஆப்பிரிக்க நாடுகளுக்கு 2.03 லட்சம் டன் அரிசியை ஏற்றுமதி செய்து, சென்னைத் துறைமுகம் இதுவரை இல்லாத அளவிலான வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளது.

இந்தச் சாதனை, துறைமுகத்தில் சரக்குக் கையாளும் நடவடிக் கைகளில் ஈடுபட்டுள்ள அனைத்துப் பங்குதாரர்களுக்கும் இடையிலான செயல்பாட்டுத் திறனையும், ஒருங்கிணைப்பையும் எடுத்துரைக்கிறது.

இந்த மைல்கல்லை அடைவதில் அர்ப்பணிப்புடன் செயல்பட்ட ஏற்றுமதியாளர்களும், முகவர்களும் வெளிப்படுத்திய ஒருங் கிணைப்பையும், குழுப்பணியையும் சென்னை துறைமுக ஆணையத்தின் தலைவர் சச்சின் எஸ்.குர்வே, பாராட்டினார். தொடர்ச்சியான உள்கட்டமைப்பு மேம்பாடுகள், வாடிக்கையாளர் திருப்தியில் கவனம் செலுத்துவதன் மூலம், இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் மொத்த சரக்குக் கையாளுதலுக்கான முதன்மையான நுழைவாயிலாகத் தனது இடத்தைச் சென்னைத் துறைமுகம் தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது.

ட்ரோன் மூலம் பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் முறையை எடுத்துரைத்த வேளாண்மை உதவி இயக்குனர்



திண்டுக்கல், நவ.19

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டார அட்மா திட்டத்தின் கீழ் வேளாண்மை உதவி இயக்குனர் பழனிச்சாமி, அறிவுரையின்படி மாங்கரை கிராமத்தில் வேளாண் பொறியியல் துறை கலந்து கொண்டு ட்ரோன் மூலம் பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் முறை பற்றி விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துக் கூறினர்.

இந்நிகழ்ச்சி வேளாண்மை இணை இயக்குனர் சுப்பிரமணியம் ஓய்வு, தலைமையில் ட்ரோன் பயன் படுத்துவது அதன் நன்மைகள் பற்றி எடுத்து கூறினர். வேளாண் பொறியியல் உதவி அலுவலர் ஹரிணி, முன்னிலையில் வேளாண் பொறியியல் திட்டங்கள் ட்ரோன் பயன்படுத்தி மருந்து தெளித்தல் அதன் பயன்கள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினர். இப்பயிற்சியில் வேளாண் வணிகம் உதவி வேளாண்மை அலுவலர் மூர்த்தி, கலந்து கொண்டு திட்டங்கள் சார்ந்த முறைகளை விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

இப்பயிற்சியில் மதுரை வேளாண் கல்லூரி மாணவர்கள் தென்னையில் காண்டாமிருக வண்டைக் கட்டுப்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்த செயல் விளக்கத் தினை திரள் இனக்கவர்ச்சிப் பொறி உழவியல் முறைகள், வேப்ப எண்ணெய், வேப்பம் புண்ணாக்கு, ஆமணக்குப் புண்ணாக்கு மூலம் உணவு ஈர்ப்புப் பொறி தயாரித்தல், உயிரியல் கட்டுப்பாட்டு முறை மற்றும் இரும்புக் கொக்கி மூலம் வண்டுகளை அகற்றுதல் ஆகிய கட்டுப்பாட்டு முறைகள் குறித்த செயல் விளக்கத் தினை மாணவர்கள் விஷ்ணு, வினோத் குமார், விக்னேஸ்வரன், தீபக் முருகன், அரவிந்த், ராகுல், லிங்கேஷ்வரன், மோதிலால், பார்த்திபன், கிருஷ்ணா ஆகியோர் செய்து காண்பித்தனர்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சிறுதானியங்களிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், நவ.19

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சிறுதானியங் களிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி 24.11.26 மற்றும் 25.11.26 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெறும்.

சிறுதானிய வகைகளான கேழ்வரகு, கம்பு, சோளம், சாமை, தினை, பனிவரகு போன்றவை மக்களால் உணவில் ஓரளவு சேர்த்துக் கொள்ளப்படுகிறது. நகர்ப்புறங்களில் கேழ்வரகுமட்டும் பயன்பாட்டில் உள்ளது. சிறுதானிய வகைகளில் உள்ள சத்துக் களையும் அவற்றை உபயோகித்து தயாரிக்கப்படும் கீழ்க்காணும் மதிப்பூட்டப்பட்ட தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி அளிக்கப்பட உள்ளது. அவையாவன :

- பாரம்பரிய உணவுகள்
- பிழிதல்
- அடுமனைப் பொருட்கள்
- உடனடி தயார்நிலை உணவுகள்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500 + GST 18%) – பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், மருதமலை சாலை வழியாக, கோயம்புத்தூர் – 641003

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641003. தொலைபேசி எண் : : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

உயிரியல் முறையில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி



விருதுநகர், நவ.19 விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டாரத்திற்கு உட்பட்ட அனுப்பன் குளம் கிராமத்தில் விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் (ATMA/SSEPERS) கீழ் பயிர் பாதுகாப்பில் உயிரியல் கட்டுப்பாட்டு முறைகள் குறித்த விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. சிவகாசி வேளாண்மை உதவி இயக்குநர் இராம சாமி, பயிற்சிக்கு முன்னிலை வகித்து இயற்கை விவசாயத்தில் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் முக்கியத்துவம் மற்றும் துறையில் வழங்கப்படும் மானியம் குறித்து சிறப்புரையாற்றினார். இப்பயிற்சியில் உயிரியல் கட்டுப்பாட்டு அலுவலர் கா.அரிபுத்திரன் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு செயல் விளக்கங்களுடன் பயிற்சி அளித்தார்.

அப்போது அவர் பேசியதாவது, விவசாயப் பயிர்களைப் பல்வேறு பூச்சிகள் மற்றும் நோய்கள் தாக்குவதால் மகசூல் இழப்பு ஏற்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த விவசாயிகள் பெரும்பாலும் ரசாயனப் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துகின்றனர். ஆனால், ரசாயனப் பூச்சிக்கொல்லிகளைத் தொடர்ந்து பயன்படுத்துவதால் நன்மை செய்யும் பூச்சிகளும் அழிக்கப்படுவதுடன், சுற்றுச்சூழல் பாதிப்பு, பூச்சிகளில் எதிர்ப்புத் திறன் உருவாகுதல் மற்றும் உற்பத்திச் செலவு அதிகரித்தல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இதற்கு மாற்றாக இயற்கையிலுள்ள நன்மை செய்யும் உயிரினங்களைக் கொண்டு தீங்கு விளைவிக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்தும் உயிரியல் கட்டுப்பாட்டு முறையை விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டும். மேலும் அவசூழி உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளின் வகைகளான ஒட்டுண்ணிகள், இரைவிழுங்கிகள், நோய் கிருமிகள் மற்றும் நுண்ணுயிரிகள் பற்றியும், உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளை பயன்படுத்துவதன் நன்மைகள் பற்றியும், உயிரியல்

கட்டுப்பாட்டுக் காரணிகளை பயன்படுத்தும் போது விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றியும் விவசாயி களுக்கு விளக்கமாக எடுத்துரைத்தார். இவ்வாறு ஒருங் கிணைந்த பூச்சி மேலாண்மை முறையைக் கடைப்பிடிப்பதன் மூலம் பயிர் விளைச் சலை அதிகரிப்பதுடன், விவசாயச் செலவைக் குறைத்து சுற்றுச் சூழலுக்கும் பாதுகாப்பு அளிக்க முடியும் என உயிரியல் கட்டுப்பாட்டு அலுவலர் கா.அரிபுத்திரன் விவசாயிகளுக்கு விளக்கினார்.

அருப்புக்கோட்டை வேளாண்மை அறிவியல் நிலையம் பேராசிரியர் அகிலா, நோய்கள் சாகுபடி இயக்கம் மற்றும் விவசாயிகள் முன்னேற்றம் மற்றும் கண்காணிப்பு, வருமுன் காக்கும் செயல்முறைகள் குறித்து பயிற்சி அளித்தார். மண்ணியல் துறை பேராசிரியர் கிருஷ்ணகுமார், மண்வளம் மண் உயிர் பாதுகாப்பு உயிர் உரங்கள் பயன்பாடு குறித்து பயிற்சி அளித்தார்.

மேலும் இப்பயிற்சியில் விவசாயிகளுக்கு நன்மை செய்யும் பூச்சிகள், தீங்கு விளைவிக்கும் பூச்சிகள் மற்றும் உயிரியல் கட்டுப் பாட்டுக் காரணிகளை அடையாளம் காண்பது தொடர்பாக செயல் விளக்கங்கள் அளிக்கப்பட்டன. இதில் அனுப்பன்குளம் உட்கடை கிராமமான ஆண்டியாபுரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இறுதியில் சிவகாசி வட்டார தொழில்நுட்ப மேலாளர் கணேஷ்குமார் நன்றி கூறினார். இப் பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சந்தனலட்சுமி மற்றும் ஜான்பாண்டியன் சிறப்பாக செய்திருந்தனர்.

மண் பரிசோதனை ஆய்வகத்திற்கு மாணவர்கள் களப்பயணம்!



திருவண்ணாமலை, நவ.19

பாலாறு வேளாண்மைக் கல்லூரியில் பயிலும் இறுதியாண்டு வேளாண் பட்டப்படிப்பு மாணவர்கள், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக மேலாலத்தூரில் அமைந்துள்ள மண் பரிசோதனை ஆய்வகத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டனர்.

இந்தக் களப்பயணத்தின் போது மண் மாதிரிகள் சேகரிக்கும் முறைகள், மண் பரிசோதனை செய்யும் நடைமுறைகள் மற்றும் மண்ணின் pH, மின் கடத்துத்திறன் (EC), தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து போன்ற ஊட்டச்சத்துக்களைக் கண்டறியும் முறைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், மண் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் பயிர்களுக்கு தேவையான உரப் பரிந்துரைகளை வழங்கும் முறைகள் குறித்தும் மாணவர்கள் அறிந்து கொண்டனர். மண் வளத்தைப் பாதுகாத்து, சமச்சீர் உரமிடுதல் மூலம் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் முக்கியத்துவத்தையும் தெரிந்து கொண்டனர்.

இந்தப் பயணம் மாணவர்களுக்கு மண் பரிசோதனையின் நடைமுறை அறிவையும், விவசாயிகளுக்கு மண் வள மேலாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் அவசியத்தையும் உணர்த்தியது.

விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி



கடலூர், நவ.19

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலம் சார்பாக 19.11.26 அன்று, ஸ்ரீமுஷ்ணம், காட்டுமன்னார் கோவில் மற்றும் மேல்புவனகிரி வட்டாரத்தில் உள்ள கூடையாத்தூர், ஆயிபுரம் மற்றும் நெல்லிக் கொல்லை ஆகிய கிராமங்களில், விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி நடைப்பெற்றது. இந்நிகழ்ச்சியை மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, மண்வளம் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி எடுத்துரைத்தார். இதில் முனைவர்கள் கண்ணன், சிவசங்கர் மற்றும் கலைச்செல்வி ஆகியோர் கலந்துக் கொண்டு, நிலங்களின் சத்துக்களுக்கு ஏற்றவாறு உர பரிந்துரையும், யூரியா, மற்றும் டி.ஏ.பி அதிகமாக பயன் படுத்துவதால் நிலத்திற்கு ஏற்படும் தீமைகளை பற்றி விளக்கினார். உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் தொழுஉரங்கள் பயன்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் மண்ணில் பேரூட்டம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் மேம்ப்பாடு பற்றியும் மற்றும் மண்ணிற்கு உரமிடும் போது மண்வள அட்டையில் பரிந்துரைத்த உர பரிந்துரை களை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார். இந்நிகழ்ச்சியில் வேளாண்மை துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக் கொண்டு மத்திய மாநில திட்டங்கள் பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு விளக்கினர். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம், காட்டு மன்னார்கோவில் மற்றும் மேல்புவனகிரி வட்டாரத்தை சேர்ந்த 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தலைப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

விதையின் தரத்தை உயர்த்தும் விதை நேர்த்தி முறைகள்

விதை மற்றும் மண் மூலம் பரவும் நோய்க் கிருமிகள் மற்றும் பூச்சிகளிலிருந்து முளைக்கும் விதை மற்றும் விதை நாற்றுகளை பாதுகாக்க விதை நேர்த்தி செய்யப்படுகிறது. விதை நேர்த்தி செய்வதன் மூலம் விதை முளைப்புத்திறன் மற்றும் பயறு வகைகளில் வேர் முடிச்சுகள் உருவாக்குவதை அதிகப்படுத்துகிறது. மேலும், குறைந்த/அதிக ஈரத்தன்மை போன்ற எதிர்மறையான சூழ்நிலைகளிலும் சீரான பயிர் வளர்ச்சியை தருகிறது.


1. விதை கடினப்படுத்துதல்

விதைகளை கடினப்படுத்துதல் செய்வதற்கு, விதைகளை நீரிலோ அல்லது பரிந்துரைக்கப்பட்ட கரைசல்களிலோ, ஒரு பங்கு விதைக்கு ஒரு பங்கு கரைசல் என்ற அளவில் விதைகளின் தன்மைக்கேற்ப குறிப்பிட்ட நேரத்திற்கு ஊறவைத்த பின்பு, முன்பு இருந்த ஈரப்பதம் வரும் வரை உலர வைத்து விதைக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் விதைகள் எத்தகைய சூழலிலும் நன்கு முளைத்து வீரியமுள்ள நாற்றுக்களை உற்பத்தி செய்யும். நெல், பருத்தி போன்ற விதைகளை 2% பொட்டாசியம் குளோரைடு கரைசலில் 6-8 மணி நேரம் ஊறவைத்தும், உளுந்து, துவரை போன்ற பயிறு வகைகளை 100 பிபிஎம் துத்தநாக சல்பேட், 100 பிபிஎம் மாங்கனீஸ் சல்பேட் கரைசலில் 1-3 மணி நேரம் ஊறவைத்தும் மற்றும் சோளம், இராகி போன்ற சிறுதானியங்களை 2% பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் கரைசலில் 6-10 மணி நேரம் ஊறவைத்தும் விதைகளை கடினப்படுத்தலாம்.

2. விதை முலாம் பூசுதல்

அளவில் மிகச்சிறிய விதைகளை விதைப்பில் கையாள்வது கடினம். மேலும், விதைப்பிற்கும் அதிக அளவில் விதைகள் தேவைப்படும். இத்தகைய விதைகளை விதை முலாம் பூசுவதன் மூலம் விதையின் அளவு மற்றும் வடிவத்தை, விதைப்பிற்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கலாம். மேலும், முலாம் பூசப்பட்ட விதைகளின் முளைப்பு மற்றும் பயிர் வளர்ச்சி ஊக்குவிக்கப் படுகிறது. இதனால் வயலில் தகுந்த பயிர் எண்ணிக்கை பராமரிக் கப்பட்டு அதிக விளைச்சலுக்கு வழி வகுக்கிறது.

விதை முலாம் பூசுவதற்கு, ஒட்டும் பொருள் மற்றும் நிரப்பு பொருட்கள் தேவைப்படுகின்றன. ஒட்டும் பொருட்களாக, அரிசி மற்றும் மைதா கஞ்சி, மரப்பிசின் போன்றவற்றையும் அதனுடன் பயிருக்கு ஏற்றவாறு தேவையான நுண்ணூட்டச்சத்துக்கள், உயிர்க் கட்டுப்பாட்டு காரணிகள், உயிர் உரங்கள், உயிர் பூச்சி மற்றும் பூஞ்சாணக் கொல்லிகள் போன்றவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம். தற்போது அதிக அளவில் விதைகளை முலாம் பூசுவதற்கு ஏற்ற இயந்திரங்கள் வடிவமைக்கப்பட்டு உபயோகித்தில் இருக்கின்றன.



3. பாலிமர் விதை பூச்சு

விதைகள் தற்போது பெருமளவில் பாலிமர் எனும் விதைப் பூச்சு கலவையை கொண்டு நேர்த்தி செய்யப்பட்டு சந்தைப்படுத்தப் படுகின்றன. இந்த விதைப் பூச்சு பாலிமரில் ஒட்டும் திரவம், விதை முளைப்பு மற்றும் வீரியத்தை ஊக்குவிக்கும் காரணிகள் சேர்க்கப் படுவதால் பாலிமர் விதை பூசப்பட்ட விதைகள் நன்கு முளைத்து வீரியமுள்ள நாற்றுக்களை உற்பத்தி செய்கின்றன. விதைப்பூச்சு கலவையில் பயிரின் வளர்ச்சிக்கு ஏற்ற நுண்ணூட்டச் சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் சேர்க்கப்படுவதால் விதையின் முளைப்பு மற்றும் பயிரின் வளர்ச்சி துரிதப்படுத்தப்படுகிறது. விதைப் பூச்சு செய்யப்பட்ட விதைகள் உடனடியாக தேவையான அளவிற்கு உலர்த்தப்பட்டு விடுகின்றன. இந்த விதைகளை, உடனடி விதைப் பிற்கோ அல்லது சேமிப்பிலோ வைத்துப் பயன்படுத்தலாம்.

மேலும், விவசாயிகள் தங்களிடம் உள்ள விதையின் தரத்தை அறிய அதில் 400 கிராம் அளவில் விதை மாதிரி எடுத்து, ரூ.80/- பரிசோதனைக் கட்டணத்துடன் நேரிலோ அல்லது தபால் மூலமாகவே அனுப்பி விதையின் தரத்தினை தெரிந்து கொண்டு, தரமான விதைகளை விதைத்து அதிக மகசூல் பெறுமாறு ஈரோடு விதைப் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் த.ஆசைத்தம்பி மற்றும் இ.விஜயா கேட்டுக்கொள்கிறார்கள்.



அணுக வேண்டிய முகவரி : வேளாண்மை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு வளாகம், வாய்க்கால்மேடு பேருந்து நிறுத்தம், பெருந் துறை ரோடு, பிச்சாண்டாம்பாளையம் (அஞ்சல்), ஈரோடு – 638 052. செல் நம்பர்: 99430 70720 மற்றும் 98652 72828.

பனையூரில் வாழை நூற்புழு மற்றும் வாடல் நோயைக் கட்டுப்படுத்தும் பேரிங் மற்றும் பார்லினேஜ் தொழில்நுட்பச் செயல்விளக்கம்!



திருவாரூர், நவ.19

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் வட்டாரத்திற்கு உட்பட்ட பனையூர் கிராமத்தில் வாழையைத் தாக்கும் நூற்புழு மற்றும் வாடல் நோயைக் கட்டுப்படுத்த உதவும் பேரிங் (Paring) மற்றும் பார்லினேஜ் (Parlinage) தொழில்நுட்பங்கள் குறித்த செயல் விளக்கம் நடைபெற்றது. கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நான்காம் ஆண்டு இளங்கலை வேளாண்மை மாணவிகள், கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் முத்துராமு என்ற மாணவி இச்செயல் விளக்கத்தை மேற்கொண்டார்.

இதில், வாழைச் சாகுபடியில் நூற்புழுத் தாக்குதலால் வேர்கள் பாதிக்கப்பட்டு, செடிகளின் வளர்ச்சி குன்றுதல், இலைகள் மஞ்சளாதல் மற்றும் செடிகள் வாடுதல் போன்ற அறிகுறிகள் ஏற்படக்கூடும் என்று விளக்கப்பட்டது. மேலும், மண்ணின் மூலம் பரவும் நோய்க்காரணிகளால் ஏற்படும் வாடல் நோயின் அறிகுறிகள் மற்றும் அவற்றைக் கண்டறியும் முறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

பேரிங் (Paring) முறையில், நடவுக்குப் பயன்படுத்தப்படும் வாழைக் கிழங்கின் வேர்கள் மற்றும் வெளிப்புறத் திசுக்களில் காணப்படும் அழுகிய அல்லது பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுத்தமான கத்தியால் கவனமாக அகற்றுவது குறித்து விளக்கப்பட்டது. இதன் மூலம் பாதிக் கப்பட்ட பகுதிகளை நீக்கி, ஆரோக்கியமான நடவுப் பொருளைத் தேர்வு செய்வதன் அவசியம் எடுத்துரைக்கப்பட்டது. பார்லினேஜ் (Parlinage) முறையில், பேரிங் செய்யப்பட்ட வாழைக்கிழங்கு களுக்கு பரிந்துரைக்கப்பட்ட உயிரியல் பாதுகாப்புக் கலவையைப் பூசி அல்லது அதில் முக்கி, நடவு செய்வதற்கு முன் பாதுகாப்பு அளிக்கும் முறையின் நோக்கம் விளக்கப்பட்டது. குறிப்பாக, நூற்புழு மற்றும் மண் மூலம் பரவும் நோய்க் காரணிகளின் தாக்கத்தைக் குறைக்க ஒருங்கிணைந்த மேலாண்மை முறை களைப் பின்பற்ற வேண்டியதன் அவசியம் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், நோயற்ற மற்றும் தரமான வாழைக்கிழங்குகளை நடவுக்குத் தேர்வு செய்தல், வயலில் நீர் தேங்காமல் வடிகால் வசதி ஏற்படுத்துதல், பாதிக்கப்பட்ட செடிகளை அகற்றி முறையாக அழித்தல் மற்றும் பயிர் சுழற்சியைப் பின்பற்றுதல் போன்ற தடுப்பு முறைகள் குறித்தும் மாணவிகள் விளக்கினர்.

இந்தச் செயல்விளக்கத்தின் மூலம் வாழையில் நூற்புழு மற்றும் வாடல் நோய் மேலாண்மை, ஆரோக்கியமான நடவுப் பொருள் தேர்வு மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்த நடைமுறை அறிவை விவசாயிகள் பெற்றனர்.



50% மானியத்துடன் பண்ணைக்குட்டைகளில் மீன் வளர்க்க எப்படி விண்ணப்பிப்பது?



தமிழக அரசு 2026-27 ஆம் நிதியாண்டில் பண்ணைக் குட்டைகளில் (FARM POND) மீன் வளர்ப்பை ஊக்கு விக்கும் வகையில் மீன் வளர்க்க விரும்பும் விவசாயிகளுக்கு 50% மானியத்துடன் அதாவது 40 ஆயிரம் திட்டமதிப்பிட்டின்படி (DPR), இதில் 50% மானியத்துடன் செயல்படுத்திட ஒவ்வொரு மாவட்டங்களுக்கு தனியாக இலக்குகள் (TARGET) நிர்ணயிக் கப்பட்டுள்ளது.

திட்ட மதிப்பிட்டில் என்ன என்ன இருக்க வேண்டும்?

1) 250 முதல் 1000 சதுர மீட்டர் அளவில் குட்டைகள் இருக்க வேண்டும்.

2) மீன் வளர்ப்பை மேற்கொள்ளும் விவசாயிகள் மீன் தீவனம், உரங்கள் பண்ணைக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட வகைகளுக்கு மானியம் கோரி பிரோணை சமர்ப்பிக்க வேண்டும்.

எப்படி விண்ணப்பிப்பது?

இதில் பயன்பெற விருப்பம் உள்ள விவசாயிகள் தங்களுடைய மாவட்டங்களில் உள்ள மீன் வளர்ப்பு மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ள வேண்டும். முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை மற்றும் தகுதியின் அடிப்படையில் பயனாளி தேர்வு செய்யப் படுவார்கள். விண்ணப்பத்துடன் நில ஆவணங்கள் (பட்டா, சிட்டா) ஆதார் அட்டை நகல் மற்றும் வங்கி கணக்கு புத்தக நகல் இணைத்து விண்ணப்பிக்கலாம். பண்ணை குட்டையில் நிலத்தடி நீர் ஆதாரம் பெருக்கப்படுகிறது. மீன் வளர்ப்பதால் விவசாயிகளின் வாழ்வாதாரமும் மேம்படுத்தப்படுகிறது.

மீன்வளர்ப்போம் வருமானம் பெறுவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

பங்கேற்பு ஊரக மதிப்பீடு (PRA) மற்றும் வள வரைபடம் பற்றி RAWE மாணவிகள் செயல்விளக்கம்



திருச்சிராப்பள்ளி, நவ.19

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கோப்பு (Koppu) கிராமத்தில் மாணவிகள் ஏற்கனவே தகவல் சேகரிப்புப் பணி களை நிறைவு செய்து, பங்கேற்பு ஊரக மதிப்பீடு (Participatory Rural Appraisal – PRA) மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, மாணவிகள் கோப்பு கிராமத்தில் PRA முறையின் மூலம் பல்வேறு அடிப்படை விவரங்களைச் சேகரித்தனர். இதன் ஒரு பகுதியாக, கிராமத்தின் மக்கள் தொகை, கல்வியறிவு விகிதம், முக்கியமாகப் பயிரிடப்படும் பயிர்கள், சாகுபடி நிலங்கள் மற்றும் சாகுபடி செய்யப்படாத நிலங்களின் சதவீதம் உள்ளிட்ட விவரங்களை கிராம நிர்வாக அலுவலர் (VAO) அலுவலகத்திற்குச் சென்று சேகரித்தனர்.

மேலும், கிராம விவசாயிகளை நேரில் சந்தித்து, பயிர் சாகுபடியின் போது அவர்கள் எதிர்கொள்ளும் முக்கியப் பிரச் சினைகள் குறித்து கேட்டறிந்தனர். விவசாயிகள் தெரிவித்த நீர்ப் பற்றாக்குறை, பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல், உர மேலாண்மை மற்றும் இதர சாகுபடி சவால்களைப் பிரச்சினை மரம் (Problem Tree) வரைபடம் மூலம் வகைப்படுத்தி விளக்கினர்.

அதனைத் தொடர்ந்து, கிராமத்தில் உள்ள இயற்கை வளங்கள், நீர்நிலைகள், விவசாய நிலங்கள், சாலைகள் மற்றும் இதர முக்கிய வளங்களைக் கண்டறிந்து வள வரைபடம் (Resource Map) தயாரித்தனர்.

இந்தக் களப்பணியின் மூலம் கிராமத்தின் சமூக, பொருளாதார மற்றும் வேளாண் நிலவரங்களை அறிந்து கொள்வதுடன், விவசாயிகளின் உண்மையான பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றுக்கான தீர்வுகளை உருவாக்குவதற்குத் தேவையான அடிப்படைத் தகவல்களையும் RAWE மாணவிகள் திரட்டினர்.

கொடுமுடி வட்டாரத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி



ஈரோடு, நவ.19

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டாரம், வேளாண்மைத் துறை சார்பில் இச்சிபாளையம் கிராமத்தில் உழவர் பயிற்சி நிலையம் மூலமாக விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சிக்கு உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் ராம்ஜ்வண்யா, தலைமை தாங்கினார். மேலும் அவர் வேளாண்மை துறையின் திட்டங்களான மண் பரிசோதனை, சொட்டுநீர் பாசனம், விவசாய கொளரவ உதவி தொகை திட்டம், இ வாடகை, உழவன் செயலி, விவசாய அடையாள எண், பயிர் கணக்கீடு, அட்மா திட்டம் போன்ற மத்திய மற்றும் மாநில திட்டங்களை பற்றி தெளிவாகவும் அதனை பெறும் முறையும் பற்றி விரிவாக எடுத்து கூறினார். உதவி தோட்டக்கலை அலுவலர் இராமசந்திரன், தோட்டக்கலை சார்ந்த திட்டங்களை விளக்கினார். மேலும் விதை சான்று மற்றும் அங்கக சான்றளிப்புத்துறை அலுவலர் தனஜெயந்தி, விதைப்பண்ணை அமைக்கும் முறை மற்றும் அங்கக சான்று பெறும் முறைகள் பற்றி தெளிவாக எடுத்து கூறினார்.

மேலும் வேளாண் உற்பத்தி மற்றும் வணிகத்துறை வேளாண்மை அலுவலர் அபிநயா தனது துறை சார்ந்த திட்டங்களை பற்றி கூறினார். மேலும் விளைநிலங்களை காப்போம் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

மேலும் கிராமதங்கள் திட்டத்தில் கீழ் வேளாண்மை கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்கள் செய்தனர்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

சான்று விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற அழைப்பு!

நாம் விதைக்கும் ஒவ்வொரு விதையும் நல்ல முளைப்புத் திறனும், வீரியமும் கொண்டிருத்தல் வேண்டும். வீரியமான விதைகளே விரைவில் முளைத்து, வாளிப்பான செடிகளை உருவாக்கி, அனைத்து இடர்களையும் தாங்கி வளர்ந்து, நல்ல முறையில் காய் பிடித்து அதிக விளைச்சல் தரவல்லது. ஓரு பொருளை வாங்கும் போது அதற்கு ஐ.எஸ்.ஐ என்ற தரச்சான்று முத்திரை உள்ளதா என்று பார்த்து வாங்குகிறோம். அது போலவே விதைத்தரத்திற்கும் உத்திரவாதம் தருவது விதைச் சான்று நிறுவனமாகும். விதை உற்பத்தி தரக்கட்டுப்பாட்டுக் கென்று சட்டப்பூர்வமாக ஏற்படுத்தப்பட்ட முறையே விதைச் சான்றளிப்பாகும். மிக உன்னதமாக பயிர் இரகங்களின் விதைகளை மிகுந்த இனத்தூய்மையும், அதிக சுத்தத் தன்மையும், மிகுந்த முளைப்புத் திறனும் உள்ள விதைகளாக உழவர்களுக்கு வழங்கச் செய்வதே விதைச்சான்றளிப்பின் முக்கிய நோக்கமாகும்.

விதைச்சான்று பல்வேறு நிலைகளில் செய்யப்படுகின்றது. விதைப்புக்கு உபயோகிக்கும் விதைகள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து வாங்கப்பட்டுள்ளதா என்பது முதல் விதைப் பயிருக்கு உரிய தனிமைப்படுத்தும் தூரம், பயிர் வளர்ச்சிப் பருவம், பூக்கும் தருணம், அறுவடை சமயம், விதைச் சுத்திகரிப்பு, மூட்டை பிடித்தல் முதலியவை சரியாக உள்ளனவா என்பது வரை ஆய்வு செய்யப்படுகிறது.

மேலும், விதைகளை முளைப்புச் சோதனைக்கு உட்படுத்தி சோதனை முடிவுகளைக் கொண்டு சான்று அட்டைகள் வழங்கப் படுகின்றன. இவ்விதமாக விதை உற்பத்தியின் பல்வேறு நிலை களில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. ஆய்வின் போது வயல் தரம் மற்றும் விதைத்தரம் குறித்து பரிந்துரைக்கப்பட்ட தரம் இருந்தால் மட்டும் உற்பத்தி செய்யப்பட்ட விதைகளுக்கு சான்றளிக்கப்பட்டு, சான்று அட்டைகள் பொருத்தப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

ஆகவே விவசாயிகள் சான்று அட்டைகள் பொருத்தப்பட்ட சான்று செய்த விதைகளைப் பயன்படுத்தி அதிக மகசூலை பெறலாம்.

மேலும் விவசாயிகள் தங்கள் கைவசம் உள்ள விதைகளை விதைக்கும் போது அந்த விதைகள் சரியான முளைப்புத்திறன் உடையவைதானா என பரிசோதித்து விதைக்க வேண்டும். உளுந்து, பாசிப்பயறு போன்ற பயிர்களுக்கு 75 சதவீதமும், சூரிய காந்தி, நிலக்கடலைக்கு 70 சதவீதமும், நெல்லுக்கு 80 சதவீதமும் முளைப்புத்திறன் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மற்றும் விதை உற்பத்தியாளர்கள் தங்களிடம் உள்ள விதைகளை தூத்துக்குடி எட்டயபுரம் சாலை, ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் செயல்படும் விதைப்பரிசோதனை நிலையத்தில் உரிய கட்டணத்துடன் பரிசோதித்து முடிவுகளை பெற்றுக்கொள்ளலாம் என திருநெல்வேலி விதைப்பரிசோதனை அலுவலர் ஆனந்தி ராதிகா மற்றும் தூத்துக்குடி விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் சேக்நூஹ் ஆகியோர்கள் தெரிவித்தனர்.

மக்கள் நல மருத்துவ முகாமில் வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் பங்கேற்பு

நாமக்கல், நவ.19

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வட்டாரத்தில் அமைந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 17.11.26 அன்று நடைபெற்ற மக்கள் நல மருத்துவ முகாமில், பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் எட்டு பேர், (கோபிகா, ஞானஸ்ரீ, கோகுலப் பிரியா, குருசந்திர பிரபா, ஹபிபா, ஜெயஸ்ரீ, ஹேமலதா, ஜெர்லின் ஜிது) இறுதியாண்டு வேளாண்மை மாணவிகள் பங்கேற்றனர்.

இம்முகாம் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (Rural Agricultural Work Experience – RAWE) ஒரு பகுதியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இம்முகாமில் தமிழ்நாடு சுகாதாரத் துறை மற்றும் பொது சுகாதார அமைப்புகளின் சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகள் குறித்தும் மாணவிகள் அறிந்து கொண்டனர்.

குறிப்பாக, தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின் (National Leprosy Eradication Programme) கீழ் நாமக்கல் மாவட்டத்தில் 16.11.26 முதல் 01.12.26 வரை செயல்படுத்தப்படும் 2026 – 2027 ஆம் ஆண்டிற்கான தொழுநோய் கண்டறியும் சிறப்பு



இயக்கம் (Leprosy Case Detection Campaign) குறித்த தகவல்களையும் மாணவிகள் அறிந்து கொண்டனர்.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் தொழுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிதல், நோயின் அறிகுறிகள் குறித்த விழிப்புணர்வை பொது மக்களிடையே ஏற்படுத்துதல், நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய மருத்துவச் சிகிச்சை கிடைக்கச் செய்தல் மற்றும் நோய் பரவலைக் கட்டுப்படுத்துதல் ஆகும். மேலும், தொழுநோயின் ஆரம்ப அறிகுறிகள், தோலில் ஏற்படும் உணர்வற்ற வெளிர்ந்த அல்லது சிவந்த திட்டுக்கள், ஆரம்ப நிலையிலேயே மருத்துவ ஆலோசனை பெறுவதன் அவசியம் மற்றும் நோய் குறித்த தவறான சமூகப் பார்வை களைத் தவிர்ப்பது போன்ற விழிப்புணர்வுத் தகவல்களையும் மாணவிகள் அறிந்து கொண்டனர்.

இம்முகாமின் மூலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் கிராமப்புற மக்களுக்கு வழங்கும் அடிப்படை மருத்துவச் சேவைகள், நோய்த் தடுப்பு நடவடிக்கைகள், பொது சுகாதாரத் திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களின் பங்களிப்பு ஆகியவற்றை மாணவிகள் நேரடியாகப் பார்வையிட்டனர். இந்நிகழ்வில் பங்கேற்றதன் மூலம் மாணவிகள் வேளாண் மையுடன் இணைந்த கிராமப்புற சமூக நலன், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு விழிப்புணர்வின் முக்கியத்துவம் குறித்த நடைமுறை அறிவைப் பெற்றனர். இந்நிகழ்வு மாணவிகளின் சமூகப் பொறுப்புணர்வையும் கிராமப்புற மக்களுடன் இணைந்து பணியாற்றும் திறனையும் மேம்படுத்த உதவியாக அமைந்தது.

வேளாண்மைக் கல்லூரி மாணவர்களின் பூச்சி பொறிகள் குறித்த செயல்விளக்கம்

இராணிப்பேட்டை, நவ.19

தொன் போஸ்கோ வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் சார்பில் பள்ளி மாணவர்களுக்கு பூச்சி மேலாண்மை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் செயல்விளக்கம் நடைபெற்றது. இதில் மஞ்சள் ஒட்டும் பொறி (Yellow Sticky Trap), நீல ஒட்டும் பொறி (Blue Sticky Trap), மீன் உணவு பொறி (Fish Meal Trap)



மற்றும் மண் பானை பொறி (Mud Pot Trap) ஆகியவற்றை மாணவர்கள் நேரடியாக செய்து காண்பித்து, அவற்றின் பயன்பாடு மற்றும் பூச்சி களை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விளக்கினர். இச்செயல்விளக்கத்தை மமதி ம., மெல்பின் ஆக்சிலியா ஜா., மோனிா ஸ்ரீ, மோனிா பா., மோகன பிரியா த ., நர்மதா பொ., நர்மதா பா., ஓவியஸ்ரீ ஏ., பிரிய தர்ஷினி கு., பிரியதர்ஷினி தா. ஆகிய மாணவர்கள் மேற்கொண்டனர்.



கிசான் கோஸ்திஸ் விவசாயிகள் ஒருங்கிணைப்பு முகாம்



சிவகங்கை, நவ.19

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டாரத்தில் வேளாண்மைத் துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் கிசான் கோஸ்தீஸ் அனைத்து துறைகள் சார்ந்த ஒருங்கிணைப்பு முகாம் பாட்டம் கிராமத்தில் 19.11.26 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு திருப்புவனம் வேளாண்மை உதவி இயக்குநர் மலர்விழி தலைமையேற்று வோளண்மைத் துறையில் உள்ள திட்டங்கள் மற்றும் விவசாய அடையாள அட்டை எண் பதிவேற்றம் செய்தல் பற்றி எடுத்துரைத் தார். வேளாண்மை துணை இயக்குநர் (மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்) கமிலஸ் லீமாரோஸ், பிரதம மந்திரி கௌரவ நிதி உதவி திட்டம் மற்றும் விவசாயிகளுக்கான அடையாள அட்டை முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். ராஜேஸ்நல்லையா (RNR Agri Developer Madurai), பயிர் சாகுபடி முறைகள் கடைபிடிக்க வேண்டிய நவீன தொழில்நுட்பங்கள், புதிய இரகங்கள் அறிமுகம் குறித்து மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை பற்றி விரிவாக எடுத்துரைத்தார். மண் மாதிரி எடுத்தல் அதன் முக்கியத்துவம் பற்றி விவசாயிகளிடம் எடுத்துரைத்தார். மீன்வளத்துறை அலுவலர் சண்முகம், மீன்வளத் துறையில் உள்ள திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். கால்நடை உதவி மருத்துவர் சரண்யா, கால்நடைத் துறையில் உள்ள திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார்.

தோட்டக்கலை உதவி இயக்குநர், சர்மிளா, பழம் மரக்கன்று களுக்கான தொழில்நுட்பங்கள் மற்றும் தோட்டக்கலைதுறை திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். வேளாண்மை அலுவலர் சந்திர சேகர், நுண்ணீர் பாசன திட்டங்கள், வேளாண் துறையில் உள்ள மானிய திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். வேளாண் துறையின் இடுபொருட்கள் மற்றும் அடையாள அட்டை எண் பதிவேற்றம் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தார். உதவி வேளாண் அலுவலர் பிரியா, வேளாண் துறையில் உள்ள மானிய திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். கருத்துகாட்சி அமைக்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட பணியாளர்கள் சத்யா, சண்முகப்பிரியா, நந்தினி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

தென்னை மரக் காண்டாமிருக வண்டைக் கட்டுப்படுத்த வாளி இனக்கவர்ச்சிப் பொறி விவசாயிகளுக்கு செயல்விளக்கத்துடன் விழிப்புணர்வு

கோயம்புத்தூர், நவ.19

கோவை வேளாண்மைக் கல்லூரி மாணவிகள், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (Rural Agricultural Work Experience Programme – RAWE) கீழ் கோட்டூர் கிராமத்தில் தென்னை மரங்களைத் தாக்கும் காண்டாமிருக வண்டுகளைக் கட்டுப்படுத்துவதற்கான வாளி இனக்கவர்ச்சிப் பொறி (Bucket Pheromone Trap) அமைக்கும் முறை குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.



இந்நிகழ்ச்சியில், தென்னையில் அதிக சேதத்தை ஏற்படுத்தும் முக்கியப் பூச்சிகளில் ஒன்றான காண்டாமிருக வண்டு (Oryctes rhinoceros) பற்றியும், அதன் தாக்குதல் அறிகுறிகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் குறித்தும் விளக்கப்பட்டது. இவ்வண்டு தென்னை மரத்தின் இளம் குருத்துப் பகுதியைத் துளைத்து உண்ணுவதால், விரியும் ஓலை களில் முக்கோண வடிவ வெட்டுகள் காணப்படும். அதிகப்படியான தாக்குதலின்போது இளம் ஓலைகள் மற்றும் மரத்தின் வளர்ச்சிப் பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்படலாம்.

மேலும், காண்டாமிருக வண்டின் வாழ்க்கைச் சுழற்சி குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இப்பூச்சி முட்டை, புழு, கூட்டுப்புழு மற்றும் முதிர்ந்த வண்டு என நான்கு வளர்ச்சி நிலைகளைக் கொண்ட முழுமையான உருமாற்றத்தை (Complete Metamorphosis) அடைகிறது. பெண் வண்டுகள் மக்கிய தொழு உரம், தென்னை மரக்கழிவுகள் மற்றும் அழுகிய கரிமப் பொருட்கள் போன்ற இடங்களில் முட்டையிடுகின்றன. புழுக்கள் இத்தகைய மக்கிய கரிமப் பொருட்களை உணவாகக் கொண்டு வளர்ச்சி யடைகின்றன. முதிர்ந்த வண்டுகள் தென்னை மரத்தின் குருத்துப் பகுதியைத் தாக்குகின்றன.

தொடர்ந்து, காண்டாமிருக வண்டு களைக் கவர்ந்து பிடிப்பதற் காகப் பயன்படுத்தப்படும் வாளி இனக்கவர்ச்சிப் பொறியின் செயல்பாடு குறித்து விரிவாக விளக்கப்பட்டது. இப்பொறியில் பயன்படுத்தப்படும் இனக்கவர்ச்சி வேதிப்பொருள் (Aggregation Pheromone) முதிர்ந்த ஆண் மற்றும் பெண் வண்டுகளையும் ஈர்க்கும் தன்மை கொண்டது. இதில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் வேதிப்பொருள் எத்தில் 4–மெத்திலாக்டனோயேட் (Ethyl 4-methyloctanoate) ஆகும். இது வண்டுகளின் இயற்கையான இனக்கவர்ச்சி சமிக்ஞையைப் போன்று செயல்பட்டு, அவற்றை பொறியின் அருகே ஈர்க்கிறது.

இனக்கவர்ச்சி வேதிப்பொருள் பொருத்தப்பட்ட வாளி அல்லது பொறிக்குள் ஈர்க்கப்படும் வண்டுகள் விழுந்து வெளியேற முடியாமல் பிடிபடுகின்றன. இதன் மூலம் வயல் மற்றும் தென்னந் தோப்புப் பகுதிகளில் காணப்படும் முதிர்ந்த வண்டுகளின் எண்ணிக் கையைக் கண்காணிக்கவும், அவற்றின் எண்ணிக்கையைக் குறைக்கவும் முடியும். பொறியை அமைக்கும் இடம், இனக்கவர்ச்சி வேதிப்பொருளை மாற்ற வேண்டிய கால இடைவெளி மற்றும் பொறியில் பிடிபடும் வண்டுகளை அகற்றிப் பராமரிக்கும் முறை ஆகியவை குறித்தும் செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

மேலும், வாளி இனக்கவர்ச்சிப் பொறி அமைப்பதுடன் மட்டும் நின்றுவிடாமல், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (Integrated Pest Management – IPM) முறைகளையும் பின்பற்ற வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. தென்னந்தோப்புகளில் அழுகிய மரக்கழிவுகள் மற்றும் மக்கிய கரிமப் பொருட்கள் குவிந்து கிடப்பதைத் தவிர்த்தல், வண்டுகள் இனப்பெருக்கம் செய்யக்கூடிய இடங்களை முறையாகக் கண்காணித்தல், தென்னை மரங்களின் குருத்துப் பகுதிகளைத் தொடர்ந்து ஆய்வு செய்தல் போன்ற தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் மூலம் இனக்கவர்ச்சிப் பொறியின் அறிவியல் அடிப்படை, அதன் பயன்பாடு மற்றும் தென்னை மரங்களில் காண்டாமிருக வண்டுகளால் ஏற்படும் சேதத்தைக் குறைப்பதில் அதன் பங்கு குறித்து விவசாயிகளுக்கு விரிவான விளக்கம் அளிக்கப்பட்டது. விவசாயிகள் ஆர்வத்துடன் செயல்விளக்கத்தில் பங்கேற்று, சுற்றுச்சூழலுக்கு உகந்த பூச்சி மேலாண்மை முறை களைப் பின்பற்றுவதன் அவசியத்தை அறிந்து பயனடைந்தனர்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

பருத்தியில் நுனி கிள்ளும் தொழில்நுட்பம் குறித்து வேளாண் மாணவிகளின் விழிப்புணர்வுப் பயிற்சி



திருச்சி, நவ.19

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஒன்றியம், பூனாம்பாளையம் கிராமத்தில், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி இறுதியாண்டு மாணவிகளான ஆ.அபிநயா, சி.தர்ஷினி, வி.இறைஎழில், ஜெ.ஜெயபிரியா, ச.கலையரசி, வெ.கவிரத்னா, பெ.மேகலா, ரா.முருகேஸ்வரி, யு.ரேவதி மற்றும் ம.செனட் வின்சி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இத்திட்டத்தின் கீழ் வலையூர் கிராம விவசாயிகளுக்கு பருத்தியில் நுனி கிள்ளும் தொழில்நுட்பம் (Cotton Nipping) குறித்து விழிப்புணர்வுப் பயிற்சி அளிக்கப்பட்டது. பருத்திச் செடிகளில் சரியான வளர்ச்சி நிலையில் நுனிப்பகுதியில் உள்ள வளர்ச்சி மொட்டுகளை அகற்றும் முறையே நுனி கிள்ளுதல் எனப்படுகிறது. இத்தொழில்நுட்பம் செடிகளின் உயரத்தைக் கட்டுப்படுத்தி, பக்கவாட்டுக் கிளைகளின் வளர்ச்சியை ஊக்குவிக்க உதவுகிறது.

மேலும், பக்கவாட்டுக் கிளைகளின் வளர்ச்சி அதிகரிப்பதன் மூலம் பூக்கள் மற்றும் காய்கள் உருவாகும் வாய்ப்பு மேம்படுகிறது. இதனால் பருத்தி மகசூலை அதிகரிக்க உதவுகிறது. நுனி கிள்ளுதல் முறையை மேற்கொள்ளும்போது செடியின் ஆரோக்கியமான வளர்ச்சியைப் பாதிக்காமல், பயிரின் ரகம் மற்றும் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப சரியான நேரத்தில் மேற்கொள்ள வேண்டும் என மாணவிகள் விளக்கினர்.

இந்தச் செயல்விளக்கத்தின் போது, பருத்திச் செடிகளில் நுனி கிள்ளும் முறையை நேரடியாகச் செய்து காண்பித்து, அதன் முக்கியத்துவம் மற்றும் பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். மேலும், பயிரின் வளர்ச்சி நிலையைப் பொறுத்து வேளாண் துறை பரிந்துரைகளைப் பின்பற்றி இத்தொழில் நுட்பத்தைச் செயல்படுத்துமாறு அறிவுறுத்தினர்.

இந்தப் பயிற்சியின் மூலம் விவசாயிகளுக்கு பருத்தி சாகுபடியில் நவீன பயிர் மேலாண்மைத் தொழில்நுட்பங்கள் குறித்த விழிப் புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

ஜீவாமிர்தம் தயாரித்தல் குறித்த செயல் விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்

நாமக்கல், நவ.19



பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மை கல்லூரி மாணவிகள், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ், நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், முத்து காளிப்பட்டி கிராமத்தில் ஜீவாமிர்தம் தயாரித்தல் மற்றும் அதன் பயன்பாடு குறித்த செயல்விளக்கத்தை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில், ஜீவாமிர்தம் தயாரிக்கத் தேவையான மூலப் பொருட்கள், தயாரிக்கும் முறை மற்றும் பயிர்களுக்குப் பயன் படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. ஜீவாமிர்தம் மண்ணில் நுண்ணுயிர்களின் செயல்பாட்டை அதிகரித்து, மண் வளத்தை மேம்படுத்தி, பயிர்களின் ஆரோக்கிய மான வளர்ச்சிக்கு உதவுகிறது என்பதை மாணவிகள் எடுத்துரைத் தனர். மேலும், இயற்கை இடுபொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் சாகுபடிச் செலவைக் குறைத்து, இயற்கை வேளாண்மையை மேம்படுத்த முடியும் என்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இச்செயல்விளக்கத்தில் பொனிட்டா, தீபிகா, தேவதர்ஷினி, திவ்யா, இன்பரசி, இனியா, கீதா மற்றும் கீதா ஸ்ரீ ஆகிய பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளித்தனர். இந்நிகழ்ச்சியின் மூலம் விவசாயிகளிடையே இயற்கை வேளாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

வாழை கன்று நேர்த்தி மூலம் நூற்புழு மற்றும் பூஞ்சான நோய் கட்டுப்பாடு குறித்து வேளாண் கல்லூரி மாணவி விளக்கம்

பெரம்பூர் , நவ.19

பெரம்பூர் கிராம விவசாயிகளுக்கு வாழை கன்று நேர்த்தி மூலம் நூற் புழு மற்றும் பூஞ்சான நோய் கட்டுப்பாடு குறித்து கல்லூரி மாணவி மோகனா செயல் விளக்கம் அளித்தார்.

வாழைக்கன்றுகளைத் தேர்வு செய்தல் : வாழை நடவிற்கு 1.5 முதல் 2 கிலோ எடையுள்ள ஆரோக்கியமான வாள் வடிவ கன்றுகளைத் தேர்வு செய்ய வேண்டும். நோய் மற்றும் நூற்புழுத்



தாக்குதல் இல்லாத கன்றுகளைப் பயன்படுத்த வேண்டும். கன்றுகளில் உள்ள பழைய வேர்கள், அழுகிய கிழங்குப் பகுதிகள் மற்றும் சேதமடைந்த பகுதிகளை கூர்மையான கத்தியால் அகற்ற வேண்டும். இம்முறைக்கு 'பேரிங்' (Paring) என்று பெயர்.

கன்றுகளுக்கு நோய் தடுப்பு சிகிச்சை : சீவப்பட்ட வாழைக்கன்று களின் கிழங்குப் பகுதியை பூஞ்சைக் கொல்லி மற்றும் களிமண் கலந்த சேற்றில் நனைத்து எடுத்து, பரிந்துரைக்கப்பட்ட பூச்சி மற்றும் நூற்புழு மேலாண்மை முறைகளைப் பின்பற்ற வேண்டும். கன்றுகளை நிழலில் 24 மணி நேரம் உலர்த்திய பின்னர் நடவு செய்யலாம். 5 முதல் 6 இலைகளைக் கொண்ட திடகாத்திரமான வளர்ச்சியுள்ள கன்றுகளை நடவுக்குப் பயன்படுத்தலாம்.

நிலம் தயாரித்தல் மற்றும் நடவு முறை : ஈரநிலத்தில் முன் உழவு தேவையில்லை. தோட்ட நிலத்தில் நடவுக்கு முன் 2 முதல் 4 முறை உழவு செய்ய வேண்டும்.

வாழைக்கன்று பராமரிப்பின் நன்மைகள் : வாழைக்கன்றுகள் நன்கு வளர்ச்சி அடைகின்றன. வேர் வளர்ச்சி அதிகரிக்கிறது. கிழங்கு அழுகல் நோயைக் குறைக்க உதவுகிறது. நோய்த் தாக்குதலைக் கட்டுப்படுத்த உதவுகிறது.

சொட்டு நீர்ப்பாசன முறை குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம்



திருச்சிராப்பள்ளி, நவ.19

திருச்சிராப்பள்ளி மாவட்டம், நாளந்தா வேளாண்மைக் கல்லூரியின் இறுதியாண்டு மாணவிகளான மா.ஹரிணி, அ.பராசக்தி, மு.பிரிய தர்ஷினி, சே.பிரியதர்ஷினி, நா.ஸ்ரீவித்யா, பா.சுபர்ணா, ஹ.தஸ்லீமா நஸ்ரின், ச.வைஷ்ணவி, நா.ச.விவிதாஸ்ரீ மற்றும் ச.ஞா.யுவஸ்ரீ ஆகியோர், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் துறையூர் வட்டாரத்தில் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு உட்பிரிவாக, கிருஷ்ணாபுரம் கிராமத்தில் விவசாயி களுக்கு சொட்டு நீர்ப்பாசன முறையின் முக்கியத்துவம் மற்றும் பயன்பாடுகள் குறித்து மாணவிகள் செயல்விளக்கம் அளித்தனர்.

இம்முறையால், சொட்டுநீர்க் குழாய்கள் மற்றும் சொட்டுவான்கள் மூலம் பயிர்களின் வேர் பகுதிக்கு நேரடியாக நீர் கொடுப்பதால் நீர் வீணாவது குறைவதுடன், நீர்ப்பயன்பாட்டுத் திறன் மேம்பட்டு, பயிர்களின் சீரான வளர்ச்சிக்கும் உதவ முடியும் என்பதை எடுத்துரைத்தனர். மேலும், சொட்டுநீர்க் குழாய்களை முறையாகப் பராமரித்தல், அடைப்புகளைத் தவிர்த்தல் மற்றும் பயிர்களின் தேவைக்கேற்ப நீர்ப்பாசனம் செய்தல் ஆகியவற்றின் அவசியத்தையும் விளக்கினர். இதன் மூலம் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, நிலையான வேளாண்மையை மேற்கொள்வது குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

